## தேசிய பேஷன் தொழில்நுட்ப நிறுவனத்தின்

# இந்திய உடை அளவு விளக்கப்பட தயாரிப்பு திட்டம்




சென்னை.பிப்.13: நேஷனல் இன்ஸ்டிடியூட் ஆஃப் ஃபேஷன் டெக்னாலஜி (NIFT) இந்தியாவின் முதல் நாடு சார்ந்த உடை அளவு விளக்கப் படத்தை உருவாக்க தேசிய அளவிலான கணக்கெடுப்பைத் தொடங்கியுள்ளது, இது பாலினம், இருப்பிடம் மற்றும் வயது போன்ற அடிப்படைத் தரவைத் தொகுத்து இந்தியர்களுக்கான சிறந்த ஆடைகளை வழங்கும் திட்டமிடலுக்கான கணக்கெடுப்பு ஆகும். கணக்கெடுப்பின் முதல் கட்டம் 1565 வயதிற்குட்பட்ட அளவு அட்டவணையில் பார்க்கப் படும், இரண்டாவது கட்டத்தில் குழந்தைகளுக்கான அளவுகள் மற்றும் காலணிகளுக்கான வரைபடங்கள் இருக்கும்.

இந்த முழு ஸ்கேனிங் செயல்முறைக்கு சுமார் 15 நிமிடங்கள் எடுக்கும்.

டிசைன் ஸ்மித் பிரைவேட் லிமிடெட்டின் ஆதரவின் மூலம் ஜூலை 2021 முதல் கணக்கெடுப்பு நடத்தப்படுகிறது. லிமிடெட். இந்திய அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் தொழில்துறை கூட்டமைப்பு சிவிகிமிஆல் ஆதரிக்கப்படும் திட்டம் ஆகும். இந்த திட்டம் இந்தியாவின் ஆறு பிராந்தியங்களில் அமைந்துள்ள ஆறு வெவ்வேறு நகரங்களில் உள்ள 15 65 வயதுக்குட்பட்ட 25000 மக்களை அளவிடுகிறது, அதாவது புதிய டெல்லி (வடக்கு), மும்பை (மேற்கு), சென்னை (தெற்கு), ஹைதராபாத் (மையம்), கொல்கத்தா (கிழக்கு) மற்றும் ஷில்லாங் (வடக்கு கிழக்கு) ஆகிய பகுதிகளில் 3D உடல் ஸ்கேனிங் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி இந்த திட்டம் செயல்படுத்தப் படுகிறது.

இந்திய ஆண்கள் மற்றும் பெண்கள் மேலை நாடுகளில் உள்ள பயனாளர்களின் உடை அளவுகளில் இருந்து வேறுபடு கிறார்கள். இந்திய ஆண்களின் கழுத்தின் அளவு மேற்கில் உள்ள ஆண்களிடமிருந்துவேறுபடுகிறது. மேற்கத்திய ஆண்களுடன் ஒப்பிடும்போது இந்திய ஆண்களின் கழுத்து சற்று தடிமனாக இருக்கும். இனிமேல் இந்திய நுகர்வோர் பிராண்டட் ஆடைகளை வாங்கும் போது தனது சட்டை அல்லது பேண்ட்டின் பொருத்தத்தில் சமரசம் செய்ய வேண்டியதில்லை.